11. சட்டமுன்வடிவுகள் (ஆய்வுசெய்தல்)

(அ) நகராட்சி சட்டங்கள் சார்ந்த (திருத்த) சட்டமுன்வடிவு, 1992.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசினர் சட்டமுன்வடிவுகள் ஆய்வு செய்தல், 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சிச் சட்டங்கள் சார்ந்த (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 8/1992). மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சிச் சட்டங்கள் சார்ந்த (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 8/1992) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்'' எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த சட்டமுன்வடிவும் சேர்த்து விவாதத்திற்கு வைக்கப்படுகிறது. எனவே விவாதத்தில் பங்கு பெறுகின்ற மாண்புமிகு உறுப்பினர்கள் இரண்டு சட்டமுன்வடிவுகள் மீதும் தங்களுடைய கருத்துக்களைக் கூறலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். திரு. ப. ரங்கநாதன்.

திரு. ப. ரங்கநாதன் : பேரவைத் தலைவர் அவர்களே, 1992 தமிழ்நாடு நகராட்சிச் சட்டங்கள் சார்ந்த திருத்த சட்டமுன்வடிவை வரவேற்று ஒருசில கருத்துக்களை கூற அனுமதி அளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இந்த சட்டமுன்வடிவை வரவேற்பதோடு இங்கே துணை மானியகோரிக்கையின் மீது பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்கள் தேர்தல் நடத்த வேண்டும் என்ற கோரிக்கையை வைத்துப் பேசினார். (மணியடிக்கப்பெற்றது).